2026.11.23 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

01. வளர்ச்சி, மீட்சித்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான இலங்கையின் (Sri Lanka Reforms for Growth, Resilience and Openness) அபிவிருத்திக் கொள்கை நடவடிக்கையை அமுல்படுத்துவதற்காக சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்

இலங்கை அரசு பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மீண்டும் உருவாக்குதல், அரச நிதி நிலைமையின் நிலைபேற்றுத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் நிலைபேறானதும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படையை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு விரிவான பொருளாதார உறுதிப்பாடு, மீள்நிலைக்குக் கொண்டுவரல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பு வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தி வருகின்றது. குறித்த மறுசீரமைப்பு வேலைத்திட்டம் மற்றும் கொள்கை ரீதியான அர்ப்பணிப்புத் தொடர்பாக நேர்மயமான மதிப்பீட்டின் பின்னர், சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்தால் 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொள்கை அடிப்படையிலான கடனை வழங்குவதற்காக உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கடன் வசதி, அபிவிருத்திக் கொள்கை நடவடிக்கை (Development Policy Operation) இன் கீழ் உலக வங்கியால் வழங்கப்படுகின்ற நிதியுதவிக்கு இணையாக வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பொது மூலதன வளங்களின் கீழ் 24 மில்லியன் அமெரிக்க டொலர்களும் மற்றும் விசேட மூலதன வளங்களின் கீழ் 06 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் கூடிய குறித்த கடன்தொகையை, சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. பெரிய பிரித்தானியா மற்றும் வடக்கு அயர்லாந்து ஐக்கிய இராச்சியத்தின் உள்நாட்டு அரசிறை வருவாய் மற்றும் சுங்கத் திணைக்களத்திற்கும் இலங்கையின் சுங்கத்திற்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்

உலக வர்த்தக நிறுவனத்தின் வணிகங்களை வசதிப்படுத்தலுக்கான ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்குரிய இயலளவு விருத்தி மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்புக்களுக்கான சட்டகமொன்றை நிறுவும் நோக்கில் இலங்கை சுங்கத்துடன் இயலளவு விருத்தி ஒத்துழைப்புக்கள்தொடர்பான ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு பெரிய பிரித்தானியா மற்றும் வடக்கு அயர்லாந்து ஐக்கிய இராச்சியத்தின் உள்நாட்டு அரசிறை வருவாய் மற்றும் சுங்கத் திணைக்களத்தால் முன்மொழியப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தொழிநுட்ப ஒத்துழைப்புக்கள், இயலளவு விருத்தி, செயலமர்வுகள், தொழிநுட்ப மதியுரைகள், அறிவுப் பரிமாற்றம் மற்றும் கற்றல் விஜயங்களுக்கான வாய்ப்புக்கள் மூலம் சுங்கம் மற்றும் வணிகங்களுக்கான வசதிப்படுத்தல் மறுசீரமைப்புக்களுக்கு இலங்கை சுங்கத்திற்கு

ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, பெரிய பிரித்தானியா மற்றும் வடக்கு அயர்லாந்தின் ஐக்கிய இராச்சியத்தின் உள்நாட்டு அரசிறை வருவாய் மற்றும் சுங்கத் திணைக்களத்திற்கும் இலங்கையின் சுங்கத்திற்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்புக்கள் தொடர்பான உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

03. இலங்கை ஊவா பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கட்டுமானக் கருத்திட்டத்தின் வேலை ஒப்பந்தத்தை வழங்கல்

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நிர்மாணப் பணிகளின் முதலாம் கட்டத்திற்கான திட்டமிடல், நிர்மாணித்தல் மற்றும் முறைமையை அமுல்படுத்துவதற்கான பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக 2025.06.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய போட்டி விலைமனுக் கோரல் முறையின் கீழ் விலைமுறிகள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 06 விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்டப் பெறுகைக் குழுவின் விதந்துரையின் அடிப்படையில் சதுட்ட பில்டேர்ஸ் (தனியார்) கம்பனிக்கு 1,699.81 மில்லியன் ரூபாய்களுக்கு (வரி நீங்கலாக) இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கட்டுமானக் கருத்திட்டத்தின் வேலை ஒப்பந்தத்தை வழங்குவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04. புத்தளம் ஆதார வைத்தியசாலையின் ஆறு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல்

வடமேல் மாகாண சபையின் கீழ் இயங்குகின்ற புத்தளம் ஆதார வைத்தியசாலையை, அபிவிருத்தி செய்தல் மற்றும் தரமுயர்த்தும் நோக்கத்துடன் வடமேல்மாகாண ஆளுநரின் உடன்பாட்டின் அடிப்படையில் மத்திய அரசுக்கு ஒப்படைப்பதற்காக 2026.03.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை மூலம் நோயாளர்களுக்கு தொடர்ச்சியான தரப்பண்பான மருத்துவ சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு அதன் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யப்பட்டு மேம்படுத்த வேண்டிய தேவை அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, சிகிச்சை, குறுகியகால வதிவிட சிகிச்சைப் பிரிவு, இரத்த வங்கி, பிணி ஆய்வு மற்றும் ஆய்வுகூட வசதிகளுக்கான இடஒதுக்கீடு உள்ளிட்ட 8,640 சதுரமீற்றர் தரைப் பரப்பளவுடன் கூடிய ஆறுமாடிக் கட்டிடத்தை 04 ஆண்டுகளில் புத்தளம் ஆதார வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவைத் தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள உத்தேச கட்டிடத்தின் முதல் மூன்று மாடிகளை நிர்மாணிப்பதற்கான 600 மில்லியன் ரூபாய்களை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு உத்தேச ஆறுமாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும், அதன் முதல் மூன்று மாடிகளை நிர்மாணிப்பதற்கான 600 மில்லியன் ரூபாய்கள் நன்கொடையை பெற்றுக்கொள்வதற்காக

இந்திய அரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. எனக்சபாரின் சோடியம் ஊசிமருந்து 4,000 சர்வதேச அலகுகள்/0.4 மில்லிலீற்றர் செறிவு கொண்ட முன்நிரப்பப்பட்ட மருந்துக் குப்பிகள் 920,000 இனை விநியோகிப்பதற்கான பெறுகை

இதய நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற எனக்சபாரின் சோடியம் ஊசிமருந்து 4,000 சர்வதேச அலகுகள்/0.4 மில்லிலீற்றர் செறிவு கொண்ட முன்நிரப்பப்பட்ட மருந்துக் குப்பிகள் 920,000 இனை விநியோகிப்பதற்கான பெறுகைக்கு சர்வதேச போட்டி விலைமனுக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 07 விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்டப் பெறுகைக் குழுவின் விதந்துரையின் அடிப்படையில், கணிசமானளவு விபரங்களுடன் கூடிய பதிலளிப்புக்களைக் கொண்ட குறைந்தபட்ச விலைமனுதாரரான Shenzhen Techdow Pharmaceutical Co. Ltd, (Manufacturer: Shenzhen Techdow Pharmaceutical Co. Ltd, China) இற்கு பண்டச்செலவு மற்றும் போக்குவரத்துச் செலவு உள்ளடங்கலாக 828,000 அமெரிக்க டொலர்களுக்கு குறித்த பெறுகையை வழங்குவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. பைபேசிக் ஐசோபன் இன்சுலின் ஊசிமருந்து (மனித இன்சுலின் கலவை) பீபி 1,000 சர்வதேச அலகுகள்/10 மில்லிலீற்றர் (30% திரவ இன்சுலின் 70% ஐசோபன் கலவை இன்சுலின்) 2,700,000 மருந்துக் குப்பிகளை விநியோகிப்பதற்கான பெறுகை

நீரிழிவு நோயாளர்களுக்கான சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகின்ற பைபேசிக் ஐசோபன் இன்சுலின் ஊசிமருந்து (மனித இன்சுலின் கலவை) பீபி 1,000 சர்வதேச அலகுகள்/10 மில்லிலீற்றர் (30% திரவ இன்சுலின் 70% ஐசோபன் கலவை இன்சுலின்) 2,700,000 மருந்துக் குப்பிகளை விநியோகிப்பதற்கான சர்வதேச போட்டி விலைமனுக்கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 02 விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர் உயர்மட்டப் பெறுகைக் குழுவின் விதந்துரையின் அடிப்படையில், கணிசமானளவு விபரங்களுடன் கூடிய பதிலளிப்புக்களைக் கொண்ட ஒரேயொரு விலைமனுதாரரான M.J. Biopharm Private Limited, (Manufacturer: M.J. Biopharin Pvt Ltd., India) இற்கு பண்டச்செலவு மற்றும் போக்குவரத்துச் செலவு உள்ளடங்கலாக 4.293 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குறித்த பெறுகையை வழங்குவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

07. புத்தளம் மாவட்டச் செயலகத்திற்குப் புதிய கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல்

புத்தளம் மாவட்டச் செயலகத்திற்கு 03 பகுதிகளைக் கொண்ட கட்டிடத்தொகுதியை நிர்மாணிப்பதற்கு 2013 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்டிருப்பினும், தற்போது அதன் வலது பக்கத்தில் நான்கு மாடிக் கட்டிடம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் இடவசதிகள் போதியளவு இன்மையால் அலுவலகப் பிரிவுகள் பலவும் பல்வேறு இடங்களில் நடாத்திச் செல்ல வேண்டியுள்ளதுடன், அதன் நிர்வாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் மாவட்டச் செயலாளரின் நேரடிக் கண்காணிப்புக்கும் தடைகள் ஏற்பட்டுள்ளன. அதனால், அலுவலகப் பிரிவுகளை முறையான வகையில் நிறுவுதல், நிர்வாக ஒருங்கிணைப்பைப் பலப்படுத்தல், பொதுமக்கள் சேவைகளை வசதிப்படுத்தல் மற்றும் மாவட்ட மட்டத்திலான கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்குப் போதியளவு வசதிகளை வழங்கும் நோக்கில் நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடத்தொகுதியை நிர்மாணிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 04 மாடிகளுடன் கூடிய புதிய அலுவலகக் கட்டிடமொன்று, 1,000 ஆசனங்களுடன் கூடிய கேட்போர் கூடமொன்று மற்றும் வாகனத் தரிப்பிடம் உள்ளடங்கலாக புத்தளம் மாவட்டச் செயலகத்திற்கு புதிய கட்டிடத்தொகுதியொன்றை தற்போது இயங்கி வருகின்ற அலுவலக வளாகத்திலேயே நிர்மாணிப்பதற்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

08. 2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டத்திற்கமைய, கல்வி, பொது நிருவாக, நிதி, மற்றும் அரசியலமைப்பு விவகாரங்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சின் சமகாலத்தில் பதவி வகிக்கின்ற செயலாளர்கள் தேசிய மொழிக் கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவகத்தின் முகாமைத்துவ சபைக்கு உத்தியோகபூர்வ அதிகாரத்துடன் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களாவர். ஆயினும், குறித்த அலுவலர்களின் வேலைப்பளு காரணமாக அந்தந்த மாதாந்த முகாமைத்துவ சபை கூட்டத்திற்கு அவர்களின் பங்கேற்பு தொடர்பான நடைமுறை ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால், இப்பிரச்சினையைக் குறைக்கும் வகையில் குறித்த முகாமைத்துவச் சபைக்கு உத்தியோகபூர்வ அதிகாரத்துடன் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை வகுப்பதற்கு இயலுமாகும் வகையில் 2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டத்தைத் திருத்தம் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்